வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 28.06.2025 நேரம் மாலை 6.10 மணி

**தலைப்புச் செய்திகள்**

ஆரோக்கியம் முதல் சமூக பாதுகாப்பு வரை அனைத்திலும் மத்திய அரசு அக்கறை காட்டி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

94 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு சமூக பாதுகாப்பை விரிவுபடுத்தி, இந்தியா மிக சிறப்பான சாதனை படைத்துள்ளதாக தொழிலாளர் அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 2 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை 5 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மன் கீ பாத் 1 (18)*

ஒவ்வொரு ஆண்டும் யோகாசன கலைகளை கற்றுக் கொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை மக்களுடன் மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் இன்று காலை உரையாற்றினார். ஜூலை 21 ஆம் தேதி உலகம் முழுவதும் நடைபெற்ற சர்வதேச யோக தின கொண்டாட்டம் குறித்து அவர் எடுத்துரைத்தார். கடந்த 10 ஆண்டுகளாக தொடரும் இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டை விட மேலும் சிறப்பாக வளர்ந்து கொண்டே செல்கிறது என கூறினார். விசாகப்பட்டினத்தின் கடற்கரையில் 3 லட்சம் பேர் யோகப் பயிற்சியில் ஈடுபட்டதையும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடியின மாணவர்கள் 108 நிமிடங்கள் வரை, 108 சூரிய நமஸ்காரங்களை செய்து காட்டியதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். தெலங்கானா மாநிலத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் ஒன்றாக இணைந்து யோக கலை முகாமில் பங்கேற்றதையும் பிரதமர் குறிப்பிட்டார். மேலும், உலகிலேயே மிக உயரமான ரயில் பாலமான ஜம்மு-காஷ்மீரின் சினாப்பாலத்திலும் மக்கள் யோக பயிற்சியை மேற்கொண்டதையும் பிரதமர் குறிப்பிட்டார். இமயத்தின் பனி மூடிய சிகரங்களில் இந்தோ-திபத்திய எல்லையோர படை வீரர்கள் யோகாசனம்

*மன் கீ பாத் 2 (16)*

செய்வதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். குஜராத்தின் வட் நகரில் 2 ஆயிரத்து 121 பேர் ஒன்றிணைந்து, புஜங்காசனத்தை செய்து புதியதொரு உலக சாதனையை நிகழ்த்தியதையும் பிரதமர் நினைவு கூர்ந்தார். நம்முடைய வல்லமையை விரிவடைய செய்ய உடல் உறுதி, நல்வாழ்வு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். உடல் பருமனை குறைக்க உணவில் 10 சதவிகித எண்ணெய் பயன்பாட்டை குறைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆரோக்கியம் முதல், சமூக பாதுகாப்பு வரை அனைத்திலும் மத்திய அரசு அக்கறை காட்டி வருவதாக பிரதமர் தெரிவித்தார். மேலும், அவசர நிலை பற்றி குறிப்பிட்டு பேசிய பிரதமர், தேசத்தின் மீது அவசர நிலை விதிக்கப்பட்டு, 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அந்த நாளை நாம் அரசியல் அமைப்பு படுகொலை நாளாக கடைபிடித்ததையும் சுட்டிக் காட்டினார். அவசர நிலையை அமல்படுத்தியவர்கள் அரசியலமைப்பை கொலை செய்ததோடு மட்டும் அல்லாமல், நீதித் துறையையும் தங்கள் அடிமைகளாக ஏவல் துறைகளாக ஆக்கினர் என்றும் பிரதமர் தெரிவித்தார். அவசர நிலை கொடுமைகள் மக்களின் வலிமையால் முறியடிக்கப்

*மன் கீ பாத் 3 (17)*

பட்டதாகவும், மக்களின் எதிர்ப்புக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவசர நிலையை திணித்தவர்கள் தோல்வி அடைந்தார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார். அரசியலமைப்பு சட்டத்தை சக்தி உள்ளதாக வைத்திருக்க தொடர்ந்து விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்ற ஊக்கம் தமக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மருத்துவர்கள் மற்றும் பட்டய கணக்காளர்களுக்கு கவுரவம் அளிக்கும் சிறப்பான நாளாக ஜூலை 1 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். அண்மையில் இந்தியா படைத்துள்ள இரண்டு சாதனைகளையும் மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார். கண்களின் ஒளியை அடியோடு மறைத்துவிடும் ட்ராகோமா எனும் நோயில் இருந்து விடுதலை அடைந்த நாடாக இந்தியாவை உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளதை பிரதமர் திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வெற்றி லட்சக்கணக்கானவர்களின் கடின உழைப்புக்கும், சுகாதார பணியாளர்களுக்கும் கிடைத்த வெற்றி என அவர் குறிப்பிட்டார். ஜல்ஜீவன் இயக்கம், தூய்மை இந்தியா இயக்கம் போன்றவை இதற்கு காரணம் என்றும்

அவர் தெரிவித்தார். இதே போல சமூக பாதுகாப்பு திட்டத்தால் நாட்டின் 95 கோடி மக்கள் பயனடைந்து வருவதாக சர்வதேச

*மன் கீ பாத்* 4 (10)

தொழில் அமைப்பு பாராட்டி உள்ளதையும் பிரதமர் குறிப்பிட்டார். இவை சமூக நீதிகளின் வெற்றிகள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மேகாலயாவின் ஏரிப்பட்டுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இதனை உற்பத்தி செய்ய பட்டு புழுக்கள் கொல்லப்படுவது இல்லை என்பதால், இவை அகிம்சை பட்டு என அழைக்கப்படுவதாக பிரதமர் தெரிவித்தார். பனிக்காலத்தில் வெம்மையாகவும், கோடை காலத்தில் குளிர்ச்சியையும் தருவது இந்த பட்டின் சிறப்பு அம்சமாகும் என்றார். தற்சார்பு இந்தியாவை உருவாக்க இதுபோன்ற உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

*ஐஎல்ஓ* (4)

இந்தியாவின் சமூக பாதுகாப்பு கடந்த 10 ஆண்டுகளில் 19 சதவிகிதத்தில் இருந்து, 64.3 சதவிகிதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்த ஒரு செய்திக்தொகுப்பு…….

*ஐஎல்ஓ வாய்ஸ்* (16)

94 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு சமூக பாதுகாப்பை விரிவுபடுத்தி, இந்தியா மிக சிறப்பான சாதனை படைத்துள்ளது. இதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டில் 19 சதவிகிதமாக இருந்த இது, 2025 ஆம் ஆண்டில் 64.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இது, கடந்த 10 ஆண்டு காலத்தில் முன் எப்போதும் இல்லாத அதிகரிப்பு என சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. தொழிலாளர்களின் முதிய வயது காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் ஆரோக்கிய குறைபாடுகள், இயலாமை போன்றவற்றையும், தொழிலாளர்களின் குடும்பங்களில் ஏற்படும் வேலையில்லா திண்டாட்டம், நோய்களால் ஏற்படும் பாதிப்பு, போன்றவற்றையும் சமாளிக்கும் வகையில் அவர்களுக்கு வருமான பாதுகாப்பை உறுதி செய்வதே, சமூக பாதுகாப்பு அளிக்கும் திட்டமாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இந்த பாராட்டுதலை குறிப்பிட்டுள்ள மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, பிரதமர் திரு நரேந்திர

மோடியின் தலைமையின் கீழ், சமூக பாதுகாப்பு அளிப்பதில் வரலாற்று சிறப்பு மிக்க சாதனையை இந்தியா படைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மோடி பயணம் ()

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 2 ஆம் தேதி முதல், 9 ஆம் தேதி வரை ஐந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொள்ள உள்ளார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…….

*மோடி பயணம் வாய்ஸ் 1 (18)*

பிரதமர் திரு நரேந்திர மோடி கானா, டிரினிடாட், டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு ஜூலை மாதம் 2 ஆம் தேதி புதுடெல்லியில் இருந்து புறப்பட்டு செல்கிறார். கடந்த 30 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் ஒருவர் கானா நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும். அங்கு கானா அதிபருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் பிரதமர், பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் உறவை வலுப்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆய்வு செய்கின்றனர். இரண்டாவதாக, டிரினிடாட், மற்றும் டொபாகோ நாடுகளுக்கு செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். 1999 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் அந்நாடுகளுக்கு செல்வது இதுவே முதன் முறையாகும். தொடர்ந்து அந்நாடுகளின் கூட்டு நாடாளுமன்றத்திலும் பிரதமர் உரை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது. தொடர்ந்து அர்ஜெண்டினா செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிபருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார். பாதுகாப்பு, வேளாண்மை, சுரங்கம், எண்ணெய் மற்றும் எரிவாயு, புதுபிக்கப்பட்ட எரிசக்தி, வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்த துறைகளில் உறவை வலுப்படுத்துவது குறித்து

*மோடி பயணம் வாய்ஸ் 2 (7)*

இருதலைவர்களும் விவாதிக்க உள்ளனர். அடுத்து, பிரேசில் நாட்டுக்கு செல்லும் பிரதமர் அங்கு 17 வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார். மேலும், பிரேசில் அதிபருடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார். தமது பயணத்தின் இறுதி கட்டமாக பிரதமர் நமீபியா நாட்டுக்கு செல்ல உள்ளார். அந்நாட்டு அதிபரின் அழைப்பை ஏற்று, முதன் முறையாக அங்கு செல்லும் அவர், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்.

வானிலை (7)

வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தரைக்காற்று 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 7 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோடி -சுக்லா (13)

அறிவியலும், ஆன்மீகமும் நமது நாட்டின் பலம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு வரும் சுபான்ஷு சுக்லாவுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று கலந்துரையாடினார். விண்வெளியில் இந்தியாவின் கொடியை ஏற்றியதற்காக பிரதமர் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார். சந்திரயாண் வெற்றி காரணமாக நாட்டில் உள்ள இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் இடையே விண்வெளி அறிவியலில் புதிய ஆர்வம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். சுபான்ஷுவின் இந்த வரலாற்று பயணம் அதனை நிருபித்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார். ககன்யான் பயணத்தை முன்னிறுத்தி செல்வது , இந்தியாவின் சொந்த விண்வெளி நிலையத்தை உருவாக்குவது, சந்திரனில் இந்திய வீரர்களை தரையிறக்குவது ஆகியவற்றை சாத்தியப்படுத்துவதற்கான பயணத்தில் சுபான்ஷு சுக்லாவின் பயணம் முதல் அத்தியாயம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.